**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 264/2015**

**Deposition of Witness for Prosecution : P.W.9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **சின்னன்** | Caste | : | |
| Father/Husband Name | : | **கருத்தக்கண்ணு** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**(A5 Died. All other Accused Absent. Petition field and Allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 24.03.2025**

**முதல் விசாரணை**

நான் தற்போது சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். 01.01.2015 ஆம் தேதியில் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின்பேரில் வார்டு எண் 221–ல் சிகிச்சையில் இருந்த கோட்டையூரை சேர்ந்த நாகராஜ் என்பவரிடம் வாக்குமூலம் பெற்று, பின்பு செக்கானூரணி காவல் நிலையத்திற்கு 18.30 மணிக்கு வந்து, அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 1/2015, இதச பிரிவுகள் 147, 294(b), 323, 324, 506(ii) IPC and Sec. 4 of TNPHW Act படி வழக்கு பதிவு செய்துள்ளேன். முதல் தகவல் அறிக்கை **(அ.சா.ஆ.6)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே 19.30 மணியளவில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, சாட்சிகள் செல்லையா மற்றும் ஆண்டிசாமி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார்

செய்துள்ளேன். அவைகள் முறையே **(அ.சா.ஆ. 7 மற்றும் 8)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் நாகராஜ், சர்மிளா, ஆனந்தி, தவமணி, குரும்பன் ஆகியோர்களைளயும், மகசர் சாட்சிகளையும் தனித்தனியே விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரிகள் அனைவரும் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்று நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளார்கள். புகார்தாருக்கு கிசிச்சை அளித்த மருத்துவர்கள் ரவிக்குமார், வனிதா என்பவர்களை விசாரித்து காயச்சான்றுகள் பெற்றுள்ளேன். அந்த காயச்சான்றின் அடிப்படையில் காயங்கள் கொடுங்காயம் என்பதால் வழக்கின் சட்டப்பிரிவினை 147, 294(b), 323, 324, 506(ii) IPC and Sec. 4 of TNPHW Act லிருந்து 147, 294(b), 323, 326, 506(ii) IPC and Sec. 4 of TNPHW Act ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **(அ.சா.ஆ.9)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இறுதியாக சம்பவம் உண்மையென தெரியவந்ததால், எதிரிகளின் மீது மாறுதல் செய்யப்பட்ட பிரிவுகளின் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

**4வது எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்த தேதியில் 4வது எதிரியும், 1வது எதிரியும் விவாகரத்து செய்து கொண்டிருந்தார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகார் என்னால் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. புகாரில் அ.சா.1 எந்த இடத்தில் நின்று திருவிழாவை வேடிக்கை பார்த்து கொண்டிருந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்ன நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

4வது எதிரியால் யாருக்கு எந்த இடத்தில் காயம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் சம்பவ இடத்தில் வைத்து அ.சா.1க்கும், வேறு நபர்களுக்கு 4வது எதிரியால் காயம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. புகார்மனுவில் எந்த எதிரி எந்த திசையில் வந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபர்களுக்கு வேறு எங்கோ ஏற்பட்ட காயத்தை வைத்து, நான் தன்னிச்சையாக புகார் தயார் செய்து, எதிரிகள் மீது தவறான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**எதிரிகள் 1, 2, 3 தரப்பில் குறுக்கு விசாரணை**

புகாரிலும், வாக்குமூலத்திலும் சம்பவம் வாதியின் வீட்டு அருகே நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவமானது வரைபடத்தில் உள்ளபடி 15 அடி அகலமுள்ள தெரு சின்னப்பாண்டி வீட்டிற்கு நடுவில் நடந்ததாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி தவமணி, குரும்பன், செல்லையா ஆகியோர் புகார்தாரரின் இரத்த வகையறாக்கள் என்றால் தெரியாது. சம்பவ இடத்தை ஒட்டி நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தை ஒட்டி உள்ள வீடுகளின் உள்ள நபர்களை சாட்சியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்காக வாதி கொடுத்த சாட்சிகளை மட்டும் விசாரித்துள்ளனே் என்றாலும், பொது சாட்சிகளை விசாணை செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவ தினந்தன்று திருவிழா நடந்தது என்றால் சரிதான். வாதி

திருவிழாவின்போது குடிபோதையில் கூட்டத்தில் தகராறு செய்ததால் பொது மக்களால் தாக்கப்பட்டு அவருக்கு ஏற்பட்ட காயத்தை வைத்துகொண்டு எதிரிகள் மீது இருந்த முன்விரோதத்தை மனதில் வைத்து பொய்யாக கொடுக்கப்பட்ட புகாரை வழக்காக பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தை நேரடியாக செல்லாமலும், வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகள் ஆயுதங்களை காட்டி கொலை மிரட்டல் விடுத்ததாக புகாரிலோ, விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமமும் இல்லை என்றால் சரியல்ல.